இராமநாதபுரம் ஜில்லா

இரண்டாவது தமிழர் மகாநாட்டுத் தலைவர்

திருவாளர்

S. சோமசுந்தர பாரதியார் M. A., B. L.,

அவர்களின் தலைமை உரை.

(காரைக்குடி 4—12—38.)

வழுதியர் தமிழகக் கீழ்வளநாட்டு மேன்மக்களே! இன்றைய உங்கள் கூட்டம் வளம்படத் தமிழறம் வளர்த்திடுக. தமிழுக்கும் தமிழர் உரிமை நலங்களுக்கும் ஏற்பட்டிருக்கும் தற்கால நெருக்கடியில், வரும் ஏதமறிந்தகற்றி நலம்பேண ஆழ்ந்து சூழ்ந்து ஆற்றுவது தமிழரனைவருக்கும் அறனும் முதற்கடனுமாகும். இந்நந்நோக்கங் கருதிக் கூடும் இம் மகாநாட்டில் உங்களொடு கலந்து பங்குகொள்ளும் பொறுப்பும் உரிமையும் எனக்கு வழங்கிய உங்களுக்கு என்று மறவா நன்றிகூறுவதோடமையாது உங்கள் முடிவுகளை ஏற்று எதுவரினும் அவற்றின் வழி ஒழுக முயலுவதன்றிப் பிறிது கைம்மாறு கருதற்கில்லை.

இக்கூட்டம் தமிழராக்கமும், தமிழர் உரிமை நலமும் பேண விரும்பும் அனைவருக்கும் பொதுவாகும். அரசியல், பொருளாட்சி, பதவி, பிறப்பு, சமையம், கொள்கைகளின் எவ்வித வேறுபாடும் கருதாமல், தமிழர் எல்லோரும் ஒன்றுபட்டு நம்மவர் நலம் மோம்பி வளர்க்கு முயற்சி மேற்கொள்ளுவதே இம் மகாநாட்டின் நோக்கமென நம்புகிறேன். என்னை அறிவார் எல்லோருக்கும் அரசியற்றுறையில் நான் சென்ற 35 ஆண்டுகளாக மாறாத காங்கிரஸ் வாதி என்பதை இங்கு நினைவுறுத்தல் மிகையாகும். முதலில் ஜஸ்டிஸ் கட்சி யுண்டானவுடனே அதை எதிர்த்துப் பார்ப்பனரல்லாதார் தேசீய மாகாண மகாநாட்டை நெல்லையில் கூட்டி அதற்குக் காலஞ்சென்ற கேசவ பிள்ளை அவர்களைத் தலைவராக்கி நடத்திய சிலருள்

நான் ஒருவன். அன்றுதொட்டுத் தமிழர் பலரால் பார்ப்பனர்க்கடிமை யெனப் பழிக்கப்பட்டு பார்ப்பனச்சோதரரால் பாராட்டுப் பெற்று வந்த நான் இன்று திடீரென்று காங்கிரசுக்கு எதிர்க்கக்ஷிவாதியாகக் கருதப்படக் காரணமில்லையே? அன்றியும், வாணாள்முழுதும் மாறாத தேசிய வாதியும் காங்கிரஸ் தொண்டருமான திருவாளர் கருமுத்து, தியாகராஜ செட்டியார் அவர்கள், சேலம் மாணிக்கஞ் செட்டியார் அவர்கள், பொள்ளாச்சி இராமலிங்கஞ்செட்டியார் முதலியோரும், தேசியப்போரில் முனைந்து சிறைபுகுந்த பலரும், இன்னும் காஞ்சி. பரவஸ்து இராஜகோபாலாச்சாரியார், திரு. T. R. வெங்கட்டராம சாஸ்திரியார் முதலிய அறிவோடனுபவமுதிர்ந்த பலரும் இன்று கட்டாய ஹிந்தியை எதிர்க்க முன்வந்துள்ளார்களே. இவர்கள் எல்லாரையும் நாட்டின் கேடு சூழும் பகைவரெனப் பழிப்பது முறையாகுமா!

மேலும் வலுக்கட்டாயமாய் இப்போது ஹிந்துஸ்தானி யெனப் பெயரிடப்பட்ட ஹிந்தியை, தமிழ்நாட்டுப் பள்ளிகளில் எல்லா சிறுவருக்கும் பாடமாக்குவது கேடு பயக்கும் என்பது காங்கிரசுக்கு எப்படி விரோதமாகும்? ஹிந்தியைத் தாய் மொழியாகக் கொள்ளாத இந்தியமாகாணங்களில், அதைப் பொது மொழியாக்கவேண்டுமென இதுவரை எந்த காங்கிரஸ் கூட்டத்திலும் யாதொரு முடிவான தீர்மானமும் ஏற்படவில்லை. அதற்கு மாறாக இவ்விதத் தீர்மானம் இந்த ஆண்டு தில்லியில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் கொணர்ந்தபோது ஏற்கப்படாமல் மறுக்கப்பட்டது யாவருமறிந்த செய்தி. இதுமட்டோ? நம் சென்னைத் தென்மாகாணமொன்று தவிரப் பிற காங்கிரஸ் ஆட்சி ஏற்றுள்ள எந்தமாகாணத்திலும் கட்டாய ஹிந்தி ஏற்பாடில்லை. மொழி வாரியாக அகத்தாட்சி முற்றுரிமையுடையனவாக மாகாணங்கள் பிரிக்கப்படவேண்டுமெனவும், அங்கங்கே எல்லா துறைகளிலும் அம் மாகாண மொழி ஒன்றே தனியாட்சிகொள்ளவேண்டும் எனவும் விதித்து, அவ்வாறே முதலில் காங்கிரஸ் மாகாணங்கள் பிரிக்கப் பெற்று நடைபெற்றுவருகின்றனவே. உண்மை இதுவாக, எஞ்ஞான்றும் காங்கிரஸ் ஆதாரமில்லாமலும், மாகாண மக்களின் உடன்பாடு

விசதமாகப் பெறுமலும், மக்கள் விருப்பப்படியே ஆட்சி நடத்தும் கடன் மேற்கொண்ட காங்கிரஸ் மந்திரி ஒருவர், முன் அறிவிப் பின்றி தமிழருக்கு முழுதும் அந்நிய மொழியென அவரே ஒப்புக் கொள்ளும் ஹிந்தியைக் கட்டாயபாடமாக்கி, அதை யாரும் எதிர்த் தால் சிறைபுகுத்தி மகிழத் துணிவது காங்கிரஸின் அடிப்படை யான ஜனநாயகக் கொள்கைக்கு மாறுகாதா? காங்கிரஸ் ஆதரவும் தமிழ் மக்கள் அநுமதியுமின்றி இளைஞர் தலையில் பிறமொழியைக் கட்டாய பாடமாகச் சுமத்துவது முறையன்றென மறுப்பது காங்கிரஸ் விரோதமாகுமா? இவைகளை நடு நிலையில் ஆய்ந்து துணி யும்படி என் காங்கிரஸ் தமிழ்ச் சோதரரை நான் விநயத்துடன் வேண்டுகின்றேன். எத்தகைய தலைவருக்கும் "தாமே காங்கிரஸ்" எனக் கூறும் உரிமையில்லை. காந்தியடிகளே காங்கிரஸ் தன்னளவி லமையாது, காங்கிரஸ் மகாநாட்டின் திட்டம் மட்டுமே எல்லாரை யும் கட்டுப்படுத்துமல்லாது தான் கூறுவது எதுவும் காங்கிரஸ் தீர்மானமாகாது, எனப் பலகாலும் வற்புறுத்தி வருகின்றார்கள். அப்படியிருக்க யாரோ சில வட இந்திய நண்பர் சிலர் விருப்பத் திற்காக காங்கிரஸ் மாகாண ஆட்சி ஏற்றால் தான் ஹிந்தியை கட்டாய பாடமாக்குவதாக அவருக்கு வாக்குறுதிபண்ணிவிட் டேன்; அதனால் ஹிந்தியை கட்டாயமாக்குவதில் தமிழர் எல்லாரும் உடன்பட்டுத் தீரவேண்டுமென நம் முதல் மந்திரியார் ஹிந்தியைக் கட்டாயமாக்கியபின் நமக்குக் கூறுவது ஜனநாயக காங் கிரஸ் கொள்கைக்குப் பொருந்துவதாகுமா? அம் மந்திரியாரின் இம்முயற்சி ஜனநாயகக்கொள்கைக்கும், தமிழர் உரிமைக்கும் குறை வும், தமிழுக்குக் கேடும் உண்டுபண்ணுமென மறுப்பவரைக் காங்கிரஸ் விரோதிகளெனவும், அரசியல் ஆட்சி விருப்பச் சுயநல வாதிகளெனவும் பழிப்பதும் தவிர, காங்கிரஸ்காரரே அறவெறுத் திழித்துத்தூற்றும் அறனல்லாத மறச் சட்டத்தால் ஹிந்தியை எதிர்ப்பவரை ஒறுப்பதும் தம் குறிக்கோளாகக்கொள்ளும் மந்திரிமாராட்சி பாராட்டத்தக்கதா என்பதே தற்போது தமிழர் எல்லாம் ஊன்றிச் சிந்திக்கவேண்டிய பொருளாகும். இத்தகைய எதிர்ப்பு ஏற்பட்டதும், இந்திய நாட்டிற்கு ஒரு பொது மொழி இன்றியமையாததெனவும், அவ்வாறு பொது மொழியாகக்

கொள்ளத்தக்கது ஹிந்தியே எனவும், தமிழர் நலம் கருதித்தான் ஹிந்தியை கட்டாயம் புகுத்துவதை எதிர்ப்பது காங்கிரஸ் மாட்சியையும் ஆட்சியையும் எதிர்க்கும் அரசியல் விரோதக் குற்றமாகுமெனவும் கூறி நம்மவர்மேல் அடக்குமுறை ஆயுதங்களைக் கூசாமல் பிரயோகிக்கும் மந்திரியாராட்சியைப் பேணி உங்கள் சோதரரையே நீங்கள் வெறுத்துக் கைவிடுவது நாளடைவில் நாட்டு நலமும் உங்கள் பொது உரிமையும் பேணும் நல்ல முறையாகுமா என்பதை ஆழச் சிந்திக்க வேண்டுகிறேன்.

பல்லாயிரமாண்டுகளாக வளர்ந்து முதிர்ந்த தனி வேறு மொழிகள் பல பயின்று வீறு பெற்றுயர்ந்த நமது நாட்டில், நேற்று மொகலாய வல்லரசுகாரணமாய் ஒரு வடமாகாணத்தில் எழுந்ததும், இன்னும் இலக்கியம், இலக்கணம், தனக்கென எழுத்தும் கூட இல்லாததுமான ஒரு அந்நியமொழியை நம்மவர் எல்லாருக்கும் பொதுமொழியாக்குவது அவசியமா? நலம் தருமா? என்பதே முடிவுபெறாத வினாவாகும். காங்கிரசே இம் முடிவை ஏற்காமல் விலக்கியுள்ளது. முஸ்லீம்சமுதாயம் முழுவதும் இதனை எதிர்க்கிறது. வங்காள முதலிய வடமாகாணம் பலவும் ஒவ்வாமலிருந்து வருகின்றனர். பெருந்தலைவர் பலர் இன்னும் இப்புதுப் பொதுமொழிபற்றி மாறுபட்ட கருத்துடையராயுள்ளார். நாட்டன்புக்கும் ஒற்றுமைக்கும் ஹிந்தி இன்றியமையாததன்றென்பது, ஹிந்திமொழி பேசுபவரைவிட, அகில இந்திய மாகாணத்தாரைவிட, காங்கிரசுக்குத் தேர்தலில் அளவிறந்த பேராதரவு காட்டியவர் ஹிந்தியறியாத் தமிழரே என்பதறியும் நாம் ஐயுறுதற்கில்லை. ஹிந்தி மொழி பேசுபவருள்ளே நம்மினும் ஒற்றுமையுணர்வு குறைவுபட்டிருப்பதையே காணுகின்றோம்.

அன்றியும் நாகரீக உலகச் சரிதத்தில் பல கோடி மக்களடங்கி விரிந்து பரந்த பெருநாடு எதனிலும் எல்லோருக்கும், ஒரு பொது மொழியை அரசியலார் வற்புறுத்திய செய்தி கேட்கப்படாத புதுமையாகும். அதற்கு மாறாக ஒரு மொழி பேசிய சமுதாயமே வளர்ந்து நாளடைவில் பெருகுங்கால், தம்முள் பல மொழி பேசும் கிளைகளாகப் பிரிவதியல்பாகக் காணுகின்றோமே தவிர, பல மொழியு

டைய சமுதாயங்கள் புதிதாக ஒரு பொதுமொழி மேற்கொண்டதாக யாண்டும் காணலரிது. பழங்காலத்தில் தமிழொன்றே பேசிய திராவிடர், பின் தெலுங்கு, கன்னடம், மலேயாளம், துளு எனப் பலவேறு மொழி பேசும் கிளைக் கூட்டமாகப் பிரிந்து வாழ்வது உண்மை வரலாறு உணர்ந்த நமக்குக் கண்கூடு. அதுபோலவே முதலில் ஆரியப் பிராகிருதமும் பாலியுமே பேசிய வட நாட்டார் பின் பதினெட்டுக்கு மேல்பட்ட இலக்கியமுடைய வெவ்வேறு மொழி பேசுபவராய் மாறினதும் நாமறிவோம். பழம் பாரசிகம், இடைக்காலச் சீனம், துருக்கி, தற்கால உருசிய ஐக்கியக் குடிஅரசு முதலிய வல்லரசுகளில் எல்லாம் என்றும் பல வேறு மொழிகளைத் தனித்தனியே பேசிவரும் உரிமை மறுக்கப்படாமலும், பொது மொழி எதுவும் சுமத்தப்படாமலும், பல நூற்றுண்டுகளாக அரசியல் குலேயாமல் நடைபெற்றுள்ள உண்மை காணும் நாம், தொன்றுதொட்டே ஐம்பதுக்கு மேல் வேறுபட்ட பல மொழிகள் வளர்ந்து பெருகிய நமது நாட்டில் இன்று ஒரு புது மொழியைப் பொது மொழியாக்கி ஆக்கம் வளர்த்தல் எளிது, இயல்வது, இன்றி யமையாதது, எனக் கருதுவது அறிவாண்மையா? ஆணவமா? நிதானியுங்கள். ஒருகால் பின் இதனால் நலம் வளருமென நம்பி னும், இப்போது இதை வலுக்கட்டாயமாக்கத் தொடங்குவது அவசியமா? அவசரமா? என்று ஆழச் சிந்திக்கவேண்டாமா?

ஒற்றுமையை வளர்ப்பது ஹிந்தியிலோ பிற எந்த மொழியி லுமோ இருப்பதன்று. மக்களின் மனஇயல்பைப் பொறுத்துள்ளது. ஹிந்தி மாகாணத்தில் நம்மிடை இல்லாத பல கொடிய முரண்பாடு, பிளவு, பகை, போர்கள் செழித்து வளரக் காணுகிறோம். பழந் தமிழகத்தில் தமிழ் பாண்டியரை சில ஆரிய மன்னர் பழித்தனர் எனக் கேட்ட சேரன் செங்குட்டுவன் படையெடுத்துச் சென்று வென்றடக்கித் தமிழர் பெயரையும் பெருமையையும் பேணின ஒற்றுமை மலிவின் உயர்ந்த வரலாற்றுண்மையை சிலப்பதிகாரம் கூறுவதுபோலவே வங்காளச் சாதனங்களும் வலியுறுத்துகின்றன. முதலில் காடு பல கடந்து நீளிடை நீந்தி வந்த ஆரியரை ஏற்று அவருக்கு உணவும் உடையும் உறைவிடமும் தந்து நட்பு நல்கிய

வர் நம் தமிழரன்றே? வந்து நம்பால் நலம் பல பெற்றும் தம்மை உயர்த்தி, நம்மைத்தாழ்த்தி, வேறு வாழ்ந்து வீறு கூறி பிறப்புயர்வு பேசி பிளவு பெருக்கிய ஆரியர் ஒற்றுமை விரோதிகளா? வேறு பாடறியாமல் விருந்தினர் யாரையும் பொருந்த ஏற்றுப் பாராட்டித் தம் ஒத்த உரிமை நலங்கள் வழங்கிவரும் தமிழருக்கு ஒற்றுமை யுணர்வூட்டத்தக்கவரா? பின்னும் யவனர், அரபியர், யூதர், சிறியன் கிறிஸ்தவர், முஸ்லீம்கள் முதலிய பலர் பல்காலும் வந்தேறியபோ தெல்லாம் முறையே அவ்வவரை ஏற்று நிலமும் நலம்பலவு முதவி ஒத்த உரிமை அனைத்தும் வழங்கி உடன் பிறந்தார்போலவே நடத்திவருபவர் தென் தமிழரா? வட ஆரியரா? என்றும் பிறப்பால் உயர்வு தாழ்வு பேசி, தம் பெண்டிரை மற்றவருக்கு மணமறுத்துப் பிறர் பெண்களை தாம்கொள்ள விரும்பும் வடஆரியரியல்பு ஒற்றுமை வளர்ப்பதா? பிறப்பால் எல்லா உயிரினமும் ஒக்கும், தத்தம் ஒழுக் கம் ஊக்கச்சிறப்பால் மட்டுமே, உயர்வு ஒப்புக்கொள்ளத்தகும் என முழுங்கும் பொது வேதமுடைய தமிழர் ஒற்றுமை குன்றியவரா? தம் நூலோர்மறை; பிறர் படிப்பதற்கும் அருகரல்லர் எனும் ஆரியர் நாட்டில் ஒற்றுமையை வளர்த்தனரா? உண்மைக்கு ஒளிப்புவேண்டா மென எலலார்க்கும் அறிவுகொண்டளந்துகொள்ளப் பொது வேதம் உதவிய தமிழர் ஒற்றுமை ஆரியர்மொழியா லினிக்கற்கவேண்டிய வரா? பிறப்பால ஒரு வகுப்பினர் என்றும் எது செய்தும் பெரியோரேயாவர்; அவர்க்குத் தொண்டு செய்வதே பெரும் பேறும் தலைக்கடனுமாகக்கொண்டு வாழக் கடவுளால் படைக்கப் பட்டவரே பெருங் குழுவினரான தமிழர்; எனக் கருதியதோடமை யாது அதைக் கூசாமல் பேசியும நடத்தியும் வருபவர் ஒற்றுமை உதவுபவரா? "ஒழுக்கம் உடைமை குடிமை, இழுக்கம் இழிந்த பிறப்பாய்விடும்," என விலக்கின்றி எல்லாவக்கும் ஒரேபடியாய் விதித்த தமிழர், இந்தி மல்லரிடம் இனி ஒற்றுமை கற்கவேண்டுமோ? பிறப்பால் என்றும் 10 கோடி மக்கள் தீண்டவும் காணவும் பேசவும் படாத இழிந்தவர் என விலக்கும் ஆரிய நாகரீகம் ஒற்றுமைக்கு நட்புடையதா? எவருக்கும் எஞ்ஞான்றும் "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்" என அறிந்து அனுமதியிட்டு வாழும் தமிழரியல்பு ஒற்றுமைக்குப்

பகையா? "சூத்திரர் தேடும் பொருளனைத்தும் பார்ப்பார் உடைமையாகும்" "அதை மறுப்பவரை ஒறுப்பதறன்" எனும் தீரும மொழி ஒற்றுமை வளர்க்குமா? மக்கள் "தாளாற்றித் தந்த பொருளெல்லாம குடிப்பிறப்பு வேடம் கொள்கைகளை எண்ணுமல் தக்கார்க்கு வேளாண்மை செய்தற்பொருட்டு" என உணர்ந்து வாழவைக்கும் தமிழ்மொழி ஒற்றுமை குறைக்குமா?

மொழிபற்றி என்றும் யாரும் தம்முள் மாறுபட்டுப் பகைத்த செய்தி கேட்டதுண்டா? சமயம்பற்றிய சண்டைகளும், கொள்கைகளுக்காக கொடும் பகைமையும், பல்காலும் எல்லா மக்களிடையும் ஏறபடுவதும், அவற்றால் கடும் முரண், நெடும் போர், தீராப் பழி, அகலா இகல்கள் பெருகி வளருவதுமியல்பு. இவ்வாறு கொலை முதலிய பாவமெல்லாம் வளர்க்கும் செவிலிகளான பல மதங்களை மறுத்து, ஒரு நாட்டாரை ஒரே சமையம் மேற்கொள்ளப்பண்ணி ஒற்றுமை வளர்ப்பது வேண்டாத ஒரு புதுப்பொது மொழி சுமத்துவதைவிட நல்லதல்லவா? அத்தகைய பொதுமை தந்து நாட்டு நலம் வளர்க்க முயலுதற்கு மாருக, காந்தியாரும் காங்கிரசும் பல்காலும் வற்புறுத்திய தீண்டாமை ஒழிந்தல், தீண்டாதாருக்கு ஒத்த உரிமை நலமுதவல் கோவில் வழிபாடு மறுக்காமை முதலியன பிறர் செய்யத் துடங்கினும் தாமவற்றைத் தடுத்து எதிர்த்து விலக்கி, சநாதனிகளின் சம்மதம் பெற்றபின்பே அவர் கொள்கைகளாலேயே தாழ்த்தப்பட்ட நம்சோதரர்க்கு மக்களுரிமை வழங்குவது சிந்திக்கப்படுமெனச் சநாதனத்துக்குச் சலுகை காட்டும் நம் முதல் மந்திரியார் நாட்டன்பை நாமே பாராட்டி, நம்மவரை அவர் நலிவிப்பது கண்டு அகன்று நிற்பது அறமாகுமா?

ஆரியப் பகைமையால் எதுகூறி எம்மனோர் ஹிந்தியை எதிர்ப்பதாகத் தென்னுட்டுக் காந்தியார் கூறுகின்றார். அதிலெனக்கு வியப்பில்லை. நம்மவர் அவர் கூற்றை ஒலி பெருக்கும கருவியாகப் பரப்பி வருவதே கவலையும் வருத்தமும் தருகிறது. உண்மையை மறைத்து ஒழுகுவதால் நலம் வருமா? மறக்கொணு ஆற்றல் நிறைந்த ஆங்கிலரை எதிர்ப்பது தவறெனக் கூறிப் பொய்ப்புகழ் பேசிவந்த மிதவாத இந்தியத் தலைவரை வெறுத்து பட்டாங்கு

பேசிய பின்னல்லவா காங்கிரசுக்கு வெற்றியும் வீறும் வருவதாயிற்று. வகுப்புவாதம் தவறெனு எண்ணி நான்சென்ற 30 ஆண்டுகளாகப் பேசிவந்தேன். ஆனால், நமது தற்கால காங்கிரஸ் மந்திரிமார் ஆட்சியில் அது பேசுவது குற்றம், அதை ஆட்சிமுறையில் நாளும் கையாண்டு ஒரு சில வகுப்பினருக்கு ஏற்றமும் ஆக்கமும் தருவது அறமென ஆளப்படுகின்றதே. இன்னும் நாம் ஏமாந்து தொண்டு மோகத்தில் நாட்டையும் நம்மையும் என்றும் அடிமைகளாக இருக்கச்செய்வது அறிவுடைமை யாகுமா? உள்ளிருந்து திருத்தவேண்டுமெனும் தமிழ் நண்பரைக் கூட்டம் நம்மவரே பலராகவும் தமிழர் கேடு விலக்கவும் நலம் பேணவும் இப்பலரால் ஒன்றும் கூடாமை ஏனெனக் கேட்கின்றேன். உளமார உண்மையாகக் காங்கிரஸ் ஆட்சி தமிழ் நாட்டில் தமிழருக்கு ஒத்த உரிமை, ஆதிக்கம், ஆக்கம் வழங்குகிறதா என்று தம் உள்ளத்தைக் கேட்டுணரக் கேட்கின்றேன்.

அன்றியும் முதல் மந்திரியாரின் அடக்குமுறைக்கும் ஹிந்தியைக் கட்டாயமாக்குதற்கும் முன்னதாக காங்கிரஸ் அங்கத்தினர் தமிழர் எங்கே என்று கூடி எவ்வித அனுமதி தந்தனர். இவர் உடன்பாட்டை மந்திரியார் பொருட்படுத்தி முன்னதாகக் கேட்டதாவதுண்டா? இன்னும் காந்தியவர்கள் ஹிந்திபற்றிய தன் அறிக்கை வெளியீட்டின் இறுதியில் உரிமை விரும்பும் நம்மவரையடக்க ஆங்கிலேயர் தந்த வெறுக்கவேண்டிய இராக்கத இயல்புடைய குற்றச் சட்டத் திருத்த விதிகளைத்தாழாதுடனே ஒழித்துப் பழி விலக்க வேண்டுமெனக் கடுமையாகக் கண்டித்துள்ள அச்சட்டத்தை பிற காங்கிரஸ் மாகாண மந்திரிகள் ஒழித்திருக்க, நம் மாகாண சட்ட சபையில் அதை ரத்து செய்யக்கொணர்ந்த மசோதாவை நமது முதல் மந்திரியார் எதிர்த்து வீழ்த்தி அரக்கச் சட்டத்தை ஆளுவதுமன்றி அது நம்மவரை அடக்கி ஆளுதற்கு அவசியமெனவும் அவர்களால் வாதிக்கப்படுகிறதே? இது என்ன அறம்?

இனி தற்போது ஹிந்தியை எதிர்க்கும் எவரும் அம்மொழிப்பகைமையாலவ்வாறு செய்ததில்லையே. ஹிந்தி பிரசார

சபையில் நானே உறுப்பினனாகி என் நண்பர் சிலரையும் தூண்டி ஆகச்செய்தேனே? அதைக் கட்டாயமாக்குவதாலன்றோ இவ் வெதிர்ப்புத் தொடங்கியது? யாரையும் கேளாமல் தமிழர்மேல் அந்நிய ஆரியப் புதிய பிராகிருதமொன்றைச் சுமத்தத் துணியும் மனப் பான்மையல்லவா ஜனநாயகக் கொள்கைகளுக்கு முற்றிலும் முரணு வது? வட நாட்டாரோடு நமக்கு ஒற்றுமை வளர்ப்பதாகச் சொல்லி இக் கட்டாய ஹிந்தியால் நம்மவருக்குள்ளே கடும் பிளவு உண்டு பண்ணுவது என்ன முறை? தான் எது செய்யினும் சொல்லினும் தமிழர் எல்லாரும் மறுக்காமல் உடன்படல் கடன் என்பது நமக்கு நாளடைவில் நலம் தரும் கொள்கையாமா? கட்டாய ஹிந்தியால் நமக்குள் பிளவு பெருகாதா? பெருகி நாளும் வளரவில்லையா? விசுவ கர்ம வகுப்பினரை விசுவப்பிராமணரெனக் கூறலாகாதென, விதித்து அவர்முறையிடத் தொடங்கவு முடனே அதை மாற்ற வில்லையா? சட்ட சபையில் வந்தேமாதரம் பாடுவது பொருந்தா தென முஸ்லீம் கிருஸ்துவ நண்பர் தடுத்ததை அவமதித்து, அவர் எதிர்ப்பு வலுக்கவும் உடனே விட்டுவிடவில்லையா? தணிகாசலம் செட்டி தெருப்பெயரை இரங்கசாமி அய்யங்கார் தெருவென மாற்றும் முயற்சியை அதற்கு மறுப்பு வலுத்தவுடனே விட் டொழிக்கவில்லையா? ஒற்றுமை நலம் கருதி மிகச்சிலர் எதிர்ப்புக்காக இந்தச்சிறு துறைகளில் எல்லாம் விட்டுக்கொடுத்த மந்திரிமார் தமிழ் மக்கள் பெரும்பாலோர் விரும்பாத ஹிந்தியைக் கட்டாயமாகச் சுமத் தும் கொடுமையைவிட்டு, அதை விருப்பப்பாடமாக்கினால் வரும் கேடும் பழியும் என்னவாம்? தமிழர் எதிர்ப்புப் பொருட்படுத்த வேண்டாததா? தமிழர் ஒற்றுமையின்றி என்றும் பிளவுபட்டு மெலிவதே அவரை ஆள விரும்பும் தலைவருக்கு உவப்பாகலாம். தலைவர் பிணக்குக்கஞ்சி நம் மொழிக் கொலைக்கும் ஆக்கக் கேட்டுக் கும் நாமே உடன்படுவதா? கட்டாயஹிந்தி உண்மையில் தம் தாய் மொழிக் கழிவும் தமிழர் உரிமை நலத்திற்குக் கேடும் தருமென மெய்யாக நம்புவோர் தங்கள் நன்னோக்கத்தைப் பொருபடுத்தாத அரசியலில் உலகுக் கறிவிப்பதெப்படி? அமைதியிலும் சமா தானத்துறையிலும் மறியல்செய்து பெருங் கெடுதியெனக்கருதும் தவறுகளை நீக்க முயலுவது நேரியது எனவும், அவ்வாறு செய்ய

நன்மக்கள் எல்லோருக்கும் உரிமையுண்டெனவும் காங்கிரஸ் பறை யடிக்கவில்லையா? நேற்றுச் சென்னையில் காங்கிரஸ் தோழர்கள் சான்சிபார் கிராம்பு மறியல் செய்யவில்லையா? அந்த மறியலுக்கு நம் மந்திரிமார் உடன்பாடும் வாழ்த்தும் உதவவில்லையா? நம் மாகாண முதன்மந்திரியார், ஒரு கொள்கையில் மெய்யாக ஈடுபட் டோர் அதற்கு மாறாக நடப்பவரை அவ்வாறு நடவாமல் சமாதான முறையில் மறியல் செய்யலாம் எனவும், அவ்விதம் ஹிந்தி எதிர்ப் பாளர் செய்வதில் தனக்கு தடை எதுவுமில்லை எனவும் கூறி தன் வீட்டு முன் தவறாக நடக்கத் துடங்கியதால்தான் தான் அவ்வாறு நடந்தவர்மேல் ஒறுப்புச் சட்டப் பிரயோகம் செய்ய நேர்ந்ததெனவும் விளம்பரம் செய்தார்களே? அவ்வாரவர்கள் வீட்டு முன் மறியலை நிறுத்தி, கட்டாய ஹிந்தியைத் தமிழ்ச்சிறுருக்குச் சுமத் தும் ஒரு பள்ளிமுன் சட்ட விரோத நடப்பு எதுவுமின்றி கட்டாய ஹிந்தியை எதிர்த்து மறியல்செய்துவரும் தமிழரை அருவருக்கும் அந்நியராக்கின இராக்கதச் சட்டத்தாலின்னும் தண்டித்துக் கொடுமைசெய்ய நியாயமென்ன? ஒரு கக்ஷியார் செய்தால் மறியல் புகழத் தக்க புண்ணியச் செயலாகும். அம்முறையில் அக் கக்ஷியைச் சேராதார் யாரும் எதற்காகவும்எவ்வித அமைதியுடனும் மறியல் தொடங்கினுல் அது தண்டனைக்குரிய குற்றமும் இகழ்ச்சிக்குரிய பாவமுமாய்விடுமா? கிராம்பு மறியலில் கிராம்பு விலை கொண்ட வியாபாரிகளுக்கு ஏற்படும் வருத்தத்தையும் கெடுதியையும் சிறிதும் பொருட்படுத்தாத காங்கிரஸ் நண்பர், கட்டாய ஹிந்தி கற்பிக்கும் பள்ளி முன் நின்று "ஹிந்தி வீழ்க தமிழ் வாழ்க" எனக் கூறி யாரையும் எவ்வித பலாத்காரமும்செய்யாமல் மறியல் தொடங்கினுல் அதுவும் தண்டிக்கத் தக்க தவறு எனத் துணியக் காணும் நியாயம் தான் என்னே? கிராம்பு மறியல் செய்தது தேச பக்தி எனப் பாராட்டுபவர், தவரற்ற மறியல்செய்து சிறையேற்ற பெண்மணிகளைப் பாராட்டியதுகூடத் தண்டிக்கவேண்டிய குற்றமெனத் துணிந்ததென்ன முறை? வெறுக்கும் கொலைபுரிந்தாரைக் கூட அவர் நோக்கமும் நல்லதெனை அவர் வீரத்தைக் காந்தியடிகளும் பிற காங்கிரஸ் தலைவரும் பாராட்ட வில்லையா? அப்படியிருக்க தம் தாய் மொழியும் தமிழகமும்

பேணும் தூய நோக்கொடு யாருக்கும் எனைத்தளவும் துன்புசெய்யாமல் தம் கொள்கையை வெளிப்படுத்தி சமாதானமாக மறியல் செய்யத் துடங்கி அதற்காகச் சிறைத் தண்டனையும் உவந்தேற்ற தாய்மாரைப் பாராட்டினால் அது பழிக்கும் தண்டத்துக்கும் போதுமான தவறாய்விடுமா? தமக்கு ஒவ்வாத அரசியல் கொள்கையுடைமைக்காக கட்டாய ஹிந்தி மறியல் செய்த வீரத் தமிழ் பெண்களைப் பாராட்டுவதை குற்ற வியாஜமாக்கித் தண்டிக்கத் துடங்குவது அரசியல் நீதியாமா? காங்கிரசின் கருத்துக்கும் பெயருக்கும் பெருமை தருமா? தற்போது துணையற்றாரென இகழ்ந்து அடக்குமுறையால் நம் பெண் மக்களை பால், வயது, குடிப்பிறப்பு எதனையும் கருதாமல் அறம் பழிகளுக்கஞ்சாமல், தினமணி, விகடன்போல அவதூறு பண்ண வாளாது பார்த்து நிற்பது காங்கிரஸ் தமிழருக்கு அழகா? இன்று நாமிகழும் ஹிந்தி எதிர்ப்பாளர் நம் தமிழச் சோதரர். அரசியலில் நாளை நம் நிலை மாறின் விளையக்கூடிதென்ன என்று சிந்திக்கவேண்டாமா? என்றும் காங்கிரஸ் எதேச்சாதிகாரத் தலைவருக்கே ஆளும் வாழ்வும், மற்ற தமிழருக்கு இனி எப்போதும் தாழ்வுமே முடிவெனத் துணிவது அறிவும் அறனுமாமா? நான் இங்கு பேசுவது என் போலக் கட்டாய ஹிந்தியை எதிர்ப்போருக்காக அன்று. காங்கிரசில் என் போல அநுதாப முடையராய் தற்போது தம் தலைவராவாரை எதிலும் தடுக்கமுடியாமல் வாளா தளரும் தமிழருக்காகவே பேசுகின்றேன். இகழ்வதும் இகலுவதும் அடக்கியாள முயல்வதும் இன்று எளிதாகலாம். ஆனால் தந்நலம் பேணமல் தாய்மொழித் தாய்நாடுகளின் நன்மையைக்கருதி தம்மைத் தியாகஞ்செய்ய முன்வரும் தமிழரைத் தமிழரே இன்று வலியுடையார் இனத்துணையும் பாராட்டும் விரும்பித் துன்புறுத்தத் துணிவோர் தொழில், பின் தமிழர் விழித்துத் தம்முரிமை காத்து வாழும் நாளில் என்ன விலை கொள்ளும்? என்பதை நாம் சிறிது சிந்திக்கவேண்டுகிறேன். பிறர்க்குறியாளராய்ப் பெருநோக்குடன் பிழை கருதாது முயலும் பெரியாரை எண்ணமலிகழ்வது ஏழையர் தொழிலாகும்; எப்பாலும் ஏதமே விளைக்குமல்லால் யாருக்கும் நன்மை தராது.

ஆங்கிலத்தை எதிர்க்காத எம்மனோர் ஹிந்தியை எதிர்ப்பதேன்? என வாதிப்பார் சிலர். ஆங்கிலத்தின் ஆதிக்கத்தை இடம் கிடைத்தபோதெல்லாம் நான் எதிர்த்தவன். சிற்றளவு அதில் வெற்றியும் பெற்றவன். எனில், ஆங்கிலர் ஆற்றல் திமிரால் நம்மை அடிமைகளாக்கி ஆண்ட அந்நியர். அவர் கொடுமை வெறுத்துத் தானே ஜனநாயகம் வேண்டுமென சண்டையிட்டுக் காங்கிரசுக்கு வெற்றிவிளைத்தோம். என்னளவுகூட ஆங்கிலத்தைத் தடுக்காமல் அதனால் பயன் அநுபவித்த பலர், இப்போது ஆங்கிலரைவிட அதிகக் கொடுமையோடு அடக்குமுறையாட்சியால் அந்நியப் புது மொழியை கட்டாயமாய்ச் சுமத்துவானேன்? என்பதன்றோ சிந்திக்கவேண்டியவினா. அச்சுமை அறனல்ல; ஆக்கம் தராது; எப்படியும் தற்போது நம்மவருள் பிளவும் பகையும் வளர்த்து ஒற்றுமைக்கு மாறாக வேறுபாடு விளைக்கின்றதே. அதற்காகவாவது கட்டாயத்தை விட்டுக்கொடுத்து விருப்பப் பாடமாக்கச் சொல்லுவது காங்கிரஸ் தமிழருக்குக் கடனல்லவா? மொழியளவில் கக்ஷிவாதப் பிரிவினை கருதாமல் நம்மவர் எல்லாரையும் இணக்க முயல்வது நம் கடனல்லவா? காங்கிரசுக்கு வெற்றிதந்து ஆளுமுரிமை பெறுவித்த தமிழரை வெறுக்கப்பண்ணி அவமதித்து அடக்குமுறைக்காளாக்குவது அழகாமா? மந்திரியாரின் ஹிந்தி மோகத்தை ஒவ்வாத தமிழர் எல்லாரும் 'அறிவிலிகள்,' 'குரங்குகள்' என அறைகூவிப் பழிக்கத்துணியுமாறு நம்மவரே துணை நின்று ஊக்குவது நாட்டு நலம் பேணுவதாமா? காந்தியடிகள்கூட "கட்டாய ஹிந்தியை எதிர்ப்பவர் எல்லாரும் ஒன்று அறிவின்மையால் அல்லது பொய் ஆக்கிரகத்தால் தூண்டப் பட்டவராவர்" எனத் தன் அறிக்கையில் கூறத்துணிந்தது நம்மவர் ஒற்றுமைக் குறைவாலும் துணிவற்ற அடிமை நிலையாலுமல்லவா? இவ்வாறு மொழியளவில் தன்னொடு வேறுபட்ட கருத்துடையார் எல்லாரும் அறிவிலார் அயோக்கியர் எனத் துணிந்து கூறுவது மகாத்துமப் பெருந்தன்மையாமா? ஆங்கிலர் முஸ்லீம்களை மறுக்கும்போதெல்லாம் அளந்து பேசும் பெரியார் கட்டாய ஹிந்தி எதிர்க்கும் தமிழரனைவரையும் பழிக்கத் துணிந்தது தமிழர் துணையற்று மெலிந்த ஏழையர் என்பதனாலன்றோ? அறிவுக்கும்

உண்மைக்கும் தனக்கே தனியுரிமைகொள்ள யாருக்கும் நியாயமுண்டா? காந்தியார் எவ்வளவு பெரியவரானாலும், தன் சம்மந்தியாரை அவர்கள் எவ்வளவு மதித்திருந்தாலும், ராஜாஜி செய்வதெல்லாம் சரியெனத் தனக்கு ஒருக்கால் தோன்றலாம்; அதனால் அதை உடன்படாமல் மறுப்பவருக்கு எல்லாம் அறிவும் உண்மை ஒழுக்கமுமில்லையெனத் துணிந்து பழிப்பது நல்லறமா? சொல்லறமா? தெளிதற்கில்லை. இவ்வாறு கூசாமல் இவர்கள் பேசத் துணிவது நம்மவர் அளவிறந்து இவர்களைக் கடவுளராய் வழிபடுவதால் வரும் பயனல்லவா? நல்லாரைப் பாராட்டுவதும் அவர் நல்ல குணங்களை உரைப்பதும் நல்லதாகும். ஆனால் யாரையும் கடவுளாக்கினால் அவ்வாறுக்கப்பட்டார் நாளடைவில் பிறரை இழித்துப் பழிப்பது இயல்பாகிவிடும் அறிவு கடவுட்டன்மையது. அதைப் பறிகொடுத்து யாரையும் தெய்வமாக்கி அவர் சொல்வதின் உண்மையைச் சீர்தூக்காமல் சொல்படிஎல்லாம் நாம் நடப்பதும், தவறாகத் தோன்றுமிடத்தும் யாரும் நாமாக்கிய கடவுளரை மறுப்பதும் அவர் கூற்றில் உள்ள உண்மைத் தவறுகளைக் காட்டிப் பேசுவதும் பாவமெனக்கொண்டு குறைக்காணத்துணிந்தாரைக் கண்டிக்கவும் நாம் துடங்கிவிட்டால், இது நமக்காவது நம்மால் மதிமயங்கும் மானிடக் கடவுளருக்காவது நன்மை தருமா?

அறிவையே பழித்து அடிமைத்தொண்டே அனைத்தறமென உபதேசித்து மக்களை மதியிழக்கச்செய்து வாழ்வோர் சமயவீறும், அதற்கு மயங்கும் நம் புன்சமயவெறியும் தான், நம்மவரை உரிமையிழந்து முதலில் பார்ப்பனருக்குச் சமுதாய அடிமைகளாக்கி நாளடைவில் அந்நியருக்கு அரசியலடிமைகளுமாக்கியது. உரிமை வளர்க்கும் ஆங்கிலத்தாலேயே நாம் முதலில் அடிமை வெறுப்புணரத் துடங்கினோம். அதனால் எங்கும் எவரோடும் சம உரிமை கேட்கத் துணியலானோம். இதனால் தம் வீறும் பதவியும் குறைவது காண்போர், மீட்டும் சமையப்பேரால் நம்மவரை அறிவழித்துப் புதிய அரசியல் குருமார் சொன்னபடி தொண்டாற்றும் சூத்திரராக்கத் துணிந்து வழி தேடுகின்றனர். நாமே அவர் நோக்கத்திற்குத் துணை நின்று, நமது மெய் நலம் விரும்பும் நம்மவரை அடக்க உதவுவோமா? சுயமரியாதைக்

காரரின் கொள்கைகள் சில நமக்குடன்பாடின்மைகருதி அவரைப்பழிப்பதுமன்றி, அடக்குமுறைகளுக்கு அவரை ஆளாக்க உதவுவது தமிழறமா? தகவுடைய நல்லாண்மைச் சால்பாமா? இவர் நமக்கு அந்நியரா? பகைவரா? நெருங்கிப் பழகி அவர்பால் தவறுளதை அன்பால் எடுத்துரைத்து அவரை அறிவுறுத்தி நல்வழிப்படுத்த முயல்வதல்லவா நமது கடமையாகும். அதற்கு மாறாக அவரை அறவே வெறுத்துப்பழித்துப் பகைத்து அடக்கி நசுக்க எண்ணுவது நமக்குப் புகழா, புண்ணியமா? சுயமரியாதைப் புலியும் தேர்ந்து துணிந்த நாத்திகவாதத் தலைவருமான திரு. இராமநாதப்பெரியாரை வசப்படுத்தி தம் வழிப்புகுத்தி அமைச்சராக்கி உறவாடி ஒத்து வாழும் முதல் மந்திரியாரைத் தலைவராகக் கொண்ட நம்மவர் அந்நாத்திகப் பெரியாரைப் பின்பற்றிய மற்றவரை இகழ்வதும் ஒறுப்பதும் என்ன பொருத்தம்? ஆயிரம் வேறுபாடுகள் நம்முளிருக்கலாம். எனில், அந்நிய வடநாட்டாருக்கு ஆளாகி நம்மவரை நாமிழித்துக் கெடுப்பது என்ன அறம்?

ஹிந்தியால் தமிழ் கெடாது எனப் பறையடிப்போர், மொழி பற்றிப்பேச ஹிந்தி எதிர்க்கும் தமிழர் எல்லாரையும்விட என்ன சிறப்புரிமையுடையாராவர். தமிழ்கெடாது எனச்சொல்லுபவரே, ஆங்கில அதிகாரத்தால் தமிழிழந்த நிலையும் அடைந்த கேட்டையும் ஒப்புக்கொள்ளுவர். தொலைநாட்டார் இங்கு என்றும் ஆள்வோமென நம்பாத ஆங்கிலரின் இடைச் சிறுகாலத் தொடர்பால் நலம் விரைந்திழக்கத் தொடங்கிய தமிழ், இனி என்றும் நம்மோடு நாட்டுரிமைத் தொடர்பும் நம்மேல் அரசியலாதிக்கமலிவும் விரும்பும் வடநாட்டாரின் ஆரியப் புதுப் பிராகிருத நெருக்கால் எய்தவிருக்கும் கெடுதிகளை, நாம் மறக்க முடியுமா? தமிழ் ஆரியத்தால் கெட்டு மலையாளமானதுபோல ஹிந்தியால் நொந்து, தமிழ் இவ்வடநாட்டுப் பெரிய மாரியம்மன் வார்த்து உருமாறும்; இலக்கணக் கட்டழிந்து தட்டழியும். சுருங்கச்சொல்லில் தமிழ் தன் உயிர் இழந்து ஹிந்திமயமாக மாறும். நம்மிழவு இவ்வாறு மொழியழிவோடு நில்லாது. மொழிகள் எல்லாம் அந்தந்த மக்களின் தனி உணர்வு, கலை வளர்ச்சிகளுக்கேற்றவாறு அமைந்து தழையும். ஹிந்தி வந்தால் வட ஆரியர்

உணர்வும் வழிகளுமே நாம் மேற்கொள்ள நேரும். வீடு விரும்பித் தவம் செய்யத் துணிந்த குற்றத்திற்காக சூத்திரனைக் கழுவேற்றுதல் புண்ணிய இராமராஜ்ய மெனும் ஹிந்திக் கொள்கையே நமக்கும் தடிக்கும். நாம் ஹிந்தி மல்லராக மாறி வாழலாம். ஆனால் தமிழ்மக்கள் வாழ்க்கையை அறவே இழப்பது திண்ணம். ஆங்கிலத்தை வீட்டு மொழியாக்கிய நம்மவர் வாழ்வு தமிழ் வாழ்வாகக் காண்கிறோமா? அதுபோலவே ஹிந்தியை நாட்டரசியல்மொழியாக்கியபின் தமிழருக்கு தமிழராக வாழ்வில்லை. இதுவரை ஆங்கிலம் பயின்ற நம்மவர் அதை வருவாய் தேடும் கருவியாக மட்டும் கொண்டதல்லால் வீட்டுமொழியாக ஆளாததால் தப்பினோம். இனி ஆண்களும் பெண்களும் அனைவரும் அரசியல் வீறு மொழியாக அந்நிய ஹிந்தியை மேற்கொண்டால் நம் நிலை என்னவாகும்?

இனித் "தமிழ் போனால் போகட்டும்; இந்தியர் எனும் புது வாழ்வு போதிய பெருமைதரும்"; எனக்கருதுபவரும் சிலருளர். அது விரிந்த நோக்கமெனத் தம்மையும் பிறரையும் ஏமாற்றிக் கொள்ளுகின்றனர். முதலில் "இந்தியன் எனவே கருது" என இவர் உபதேசிப்பர். விரிந்த நோக்கம் இந்தியாவோடு முடிவானேன்? உலக மக்களோடு பரந்து விரியலாமே. "முதலில் உன்னை உலகில் மனித இனத்தவனெனவே கருது; இந்தியன் ஆங்கிலன் எனக் குறுகிய நாட்டளவில் கொள்ளாதே"; எனக் கூறாமல் "இந்தியன் எனவே எண்ணு; தமிழன் எனக்கருதாதே"; எனும் இவர் சிறு மனதை என்னென்பது? தமிழ்ப்பெருமக்களே! நிதானியுங்கள். நல்ல தமிழரல்லார் நல்ல இந்தியருமாகார்; நல்ல மக்களுமேயாகமாட்டார். தங் கருமஞ்செய்யார், தவமுஞ் செய்யவொண்ணார். ஆதலால் நந்தமிழறம் பேணாவிடின், நாம் நல்ல இந்தியராகக் கடனாற்றவும் இயலாது. மேலும் வட நாட்டாருள் எல்லாரும் ஆரியப்பிராகிருதங்களையே தாய்மொழியாகக் கொண்டவர். ஆரியக் கலையுணர்வும் நாகரீகமுமே அறிந்தனுஷ்டிப்பவர். நாமோ இந்தியாவில் ஆரியர் வருவதற்குப் பல்லாயிரமாண்டுகளுக்கு முன் முதல் தனி நாகரீகமும் கலை யுணர்வும்

உயர்தனிச் செம் மொழியும் உடையவராவோம். ஆரியமும் தமிழும் ஒன்றாகிவிட்டதென மிரட்டுபவர் கூற்று வெறும் வெளி மயக்கேயாம். ஆரியருக்கும் தமிழருக்கும் பகைமை யுண்டுபண்ணும் குற்றம் சாட்டி அரசியலார் கேசுகள் நடத்து வதே இருவேறு நாகரீகச் சமுதாயங்களுள என்பதை வலியுறுத் துவதாகும். இனி, வட ஆரியர் நாகரீகமும் தென் தமிழ் நாட்டின தற்கு மாறாக என்றும் நின்று வருவதை மறுப்பவர் யார்? இதன் காரணமென்ன? வடநாடு முழுதும் ஆரிய மயமாகி விட்டது. தெற்கிலும் ஆந்திரரும் கேரளரும் ஆரிய மயமான தோடு அதில் பெருமையும் பேசுகின்றனர்.

தமிழ் ஒன்றே தொன்றுதொட்டுத் தன் தனி நிலையிழவாமல் தற்காத்து நிற்கின்றது. இதை மறைத்து, தமிழ் முழுதும் ஆரிய மயமே என மயக்க முயல்வார் என்று முளர். கொள்கைகள், ஒழுக்கங்கள், கூட்டுறவு வாழ்வு முறைகள், கலை உணர்வு, மொழி யமைதி, செய்யுள் அல்லது இலக்கியப்போக்கு, வாழ்க்கையின் நோக்கு ஒவ்வொன்றிலும் இன்றும் நாம் ஆரியரின் வேறு பட்டவர். உழவை ஆரிய மேன்மக்கள் கருதவொண்ணாத இழி தொழிலாக அவர் தரும சாத்திரங்கள் கூறும். தமிழரோ "உழந்தும் உழவே தலை" "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்; அரசரின் "பலகுடை நிழலும் தங்குடைக் கீழ் காண்பர், அலகுடை நிழலவரான உழவோர்" என அத் தொழிலே தலையாயதெனக் கொண்டவர். மானத்தை விற்றும் உயிரோம்பு என்பர் ஆரிய நூலோர். "உயிர் நீப்பர் மானம்வரின்," எனவும், "இளிவரின் வாழாத மானமுடையார் ஒளி தொழுதேத்தும் உலகு" எனவும் கொண்டோர் தமிழர். பெண்டிற்கு வீடில்லை என்பார் ஆரியர். பெண்டிர் வீடுபேறுடையராவதோடு ஆடவரை வீடு பெறவும் வைப்பர் என்று பெண்டிரைப் பாராட்டு பவர் தமிழர். பிறப்பால் உயர்வும் தாழ்வும் வகுத்தவர் இந்திய ஆரியர். "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்பர் தமிழர். இப்படியே பலபடியும் வேறுபட்ட நோக்கமும் ஆக்க முறையும்

உடைய இவ்விரு மக்கட்டொகுதியும் ஒன்றென்பார் உலகறியாராதல், உண்மை உரையாராதல் ஒருதலை. ஆகவே இவ்விருவருக்கும் ஒருவர் இயல்பும் கலையுணர்வுமுடைய மொழி ஒன்றைப் பொது மொழியாக்குதல் இயலாதது. இயலுமெனினும் நன்றன்று. இவ்வுண்மைகளை ஆழச் சிந்தியாமல் அரசியல் அவசியப் பேரால் பொது மொழி சுமத்தும் அவசரம் நம் யசமுதா வாழ்வைப் பாழ்படுத்தும்.

இனி, இலக்கிய மற்ற புதிய ஹிந்தியால் தண்டமிழ் வளம்படும், வளரும் என்பர் சிலர். வறுமையால் செல்வம் வளருமாயின், தமிழ் ஹிந்தியால் தழைதல் கூடும். இலக்கிய அறிவுவளம் நிறைந்த ஆரியம் ஆங்கிலம் முதலிய பிற மொழிகளும் கூட நட்புறவால் தமிழுக்கு நலமாற்றலாமே தவிர, தமிழோடுறழ்ந்து கலப்பின் கேடன்றி ஆக்கந்தரா. ஹிந்திச் சுமை எதுவும் நலம்தராது; எல்லா ஏதமும் விளைக்கும். பிறமொழி எதையும்; யாரும் விருப்பப்பாடமாய்க் கற்பதால் ஏதம் பெரிதில்லை. ஆனல் தன்னுடு எவ்வித இயைபும் தொடர்புமற்ற பிற மொழியைக் கட்டாயமாக்கிச் சுமத்தினல், அச்சுமை தாங்கும் சமுதாயம் தந்நிலை குன்றி பிறிது நலமுமேற்கமுடியாமல் நோவுற்றழிவது நிச்சயம்.

இதுவரை ஹிந்தியைக் கட்டாய பாடமாக்கும் அரசியலார் முயற்சியால் வரும் கேடு ஒருவாறு கூறினேன். இனி இவ்வாறு அதிகாரம் பெற்றவர் ஆதிக்கமுற்றதும் மக்களை மதியாமல் அடக்கியாள விடுவதால் வரும் கேட்டை ஓரளவு சுட்டி என் முன்னுரையை முடிக்கின்றேன். அதிகாரத் துணையால் மக்கள் விருப்பம் கருதாமல் மற்றவர் எதிர்ப்பையும் மதியாமல் வலுக்கட்டாயமாய் தன் கொள்கைகளைச் சுமத்தி அடக்குமுறையால் எதிர்ப்பவரை நசுக்கியாள விரும்பும் தலைவரால் குடியாட்சி மாட்சி குன்றும்; மக்கள் உரிமை குறையும். ஜர்மனி இத்தாலி நாடுகளில்போல நாளடைவில் நாமும் நாட்டின் பெருமை பேசி நம்மவர் மக்கட்பண்பும் தனி உரிமைப்பேறும் இழந்துழப் போம். இன்று ஹிந்தி நல்லதெனக் கட்டாயப்படுத்துபவர் நம் தலைவரென விடின், நாளை கதர் யோடாதாருக்கு 6 மாதம் சிறை விதிக்கத் துணிவர். அதற்கு மறு நாள் உடையோடு

உணவு வகையிலும், உறவு முறை, முதலிய எதிலும் எதேச்சாதிகார வெறியால் மக்களை அடக்கியாளத் துணியலாம். எந்த அளவு சரி? எங்கு யார் எப்படி இவரைத் தடுப்பது? தடையற்ற தனியாட்சி தலைவருக்குத் தந்து குடியரசெனப் பேரளவில் பெருமைகொள்ளும் உருசிய நாட்டார்போல வாழக் கருதுகின்றீர்களா? ஒவ்வொருவரும் உண்மையில் உரிமை தாங்கி உயர் வாழ்வு நடத்தும் நல்ல ஜனநாயக ஆட்சி விரும்புகின்றீர்களா?

தற்கால மந்திரிமார் ஜனநாயக உரிமைகளை பலருக்கு வழங்குதற்குமாறாக அந்நிய ஆங்கில அரசியலில் நாம் பெற்றிருந்த உரிமைகளைக்கூடக் குறைக்கவும் எடுக்கவும் விரும்புகின்றனர். ஊராண்மை நாட்டாண்மைக் கழகங்களே இனி காங்கிரஸ் ஆட்சியில் வேண்டாமெனக் கூறுகின்றனர். பல ஸ்தல ஸ்தாபனங்களுக்கு கல்வி சுகாதாரம் முதலிய பல துறைகளிலும் உள்ள உரிமைகளைப் பறித்தும், இன்னும் பல உரிமைகளைப் பறிக்க முயன்றும் வருமாட்சி குடிநலமும் மக்கள் உரிமைகளும் பேணுவதாமா? கொள்கை மாறுபாடே கூடாதென நம்மவரை நாமே அடர்த்து அவித்துவிட எண்ணமா? பலரும் கலந்துறவாடி அன்பளாவிய நட்பு வாதத்தால் உண்மையளந்துணர்ந்து மெய்யுயர்வுபெற விருப்பமா? மாகாண ஆட்சிமுறை முற்றுரிமை பேணும் நல்லரசா? நாட்டின் பொது அரசே போதுமென வட நாட்டார் ஆதிக்கத்துக்கு நம்மவர் நிலையை விட்டுவிட நினைவா! இவை போல்வன அனைத்தும் ஆழ்ந்து சூழ்ந்து முடிவு செய்தல் உங்கள் பொறுப்பாகும்.

தமிழகத்தில் யாரும் வாழலாம்; யாரிடமும் நமக்குப் பகையில்லை. எனில், தமிழகம் தமிழர் தனியாட்சிக்கே உரியதாகயிருத்தல் வேண்டும். பிழைப்புக்காக தமிழ்நாட்டிலிருப்பவர்கள் எல்லாரும் தமிழராய்விடமாட்டார்; தற்கால அவசியத்துக்காகத் தமிழைப் பேசுவதாலும் தாம் தமிழரெனக்கொள்ளப்படமாட்டார். ஆங்கிலரும் ஆந்திரர் முதலிய பிறமொழியாளர் பலரும் தமிழகத்தில் குடியிருந்து வருகின்றனர். அவரெல்லாம் தமிழரா? தமிழே தமக்குத் தாய்மொழி என மெய்யாகக் கருதிக்கையாளுபவர் தமிழராவர். ஜீவனோபாயக் கூலிமொழியாகத் தமிழைப்

பேசுவதும், தமக்குரிய சொந்த மொழி தேவமொழியான ஆரியமென கையாண்டுவருவதோடு, சடங்குகள் முதலிய எல்லா நல்ல காரியங்களுக்கும் தமிழ் ஆகாதென இழிப்பதும்செய்து வருபவர் மெய்யான தமிழராவதெப்படி? வேலை முதலிய அரசியல் நலம் பெறத் தாம் பிராமணரல்லாதாராகக் கூறியும், மற்றவிடங்களில் தம்மை அசல் பார்ப்பனராகப் பாராட்டியும் வரும் சில வகுப்பினர் போலவே, தம்மைச் சமுதாயச் செய்திகளுக்கெல்லாம் ஆரியரெனக்கூறிக்கொண்டு, தமிழரோடு போட்டியிடவேண்டியபோது தாமும் நல்ல தமிழரெனப் பேசுபவர் கூற்றுக்கு விலையுண்டா? பலன்தானுண்டா? ஆகவே தமிழகம், தமிழை என்றும் தனி உயர் தாய் மொழியாகக் கையாளும் தமிழருக்கே உரியதென உணர்தல்வேண்டும்.

'நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தால்' மட்டும் போதாது. "அது நமக்கே உரியதா"மென்பதறிதல்வேண்டும். ஆங்கிலர் ஆட்சியிலும் இந்தியா, இந்தியர் நாடுதான். எனில்; அது இந்தியருடைய உரிமையற்றதாயிருந்தது. அதுபோல காங்கிரஸ் ஆட்சியில், மாகாணங்கள் மாகாணமொழியாருடையன என்ற அளவோடு அமையுமா? அல்லது ஒவ்வொரு மொழியுடைய மாகாணமும் அரசியல்மொழியினர்க்கே உரிமையுடையதாகப்போகிறதா? தமிழகம் தமிழருக்கே உரியதா? அன்றி படேல், நேரு, போசு முதலிய வட நாட்டினரின் ஆதிக்கத்துக்கு அடங்கி மீட்சியற்ற அன்னோர் ஆட்சிக்கடிமை நாடா? காந்தியாரும் நல்ல யோசனை கூறலாமே தவிர, ஆட்சியிலாதிக்கம் நம் மாகாணத்தில்கொள்ள விடுவது நன்மை தராது. கேவலம் கக்ஷி வாதத்துக்குப் பேசி, அந்நியருக்கு உறவாய் நம்மவர் பகைவராகப்போகிறீர்களா? அன்றி என்றும் நன்று தரும் ஆட்சிமுறை வளர்க்க விருப்பமா? "முன் மக்களுக்கு உரிமை வேண்டினது முறை; இப்போது நம் தலைவராளுவதால் நமக்குரிமை வேண்டா"மெனப் பேசிப் பேதுறுக்கும் போலி வாதங்களுக்கு உடன்பாடா? ஆளுவோர் யாராயினும் என்றும் நம்மவர் எல்லாருக்கும் ஆட்சி முறையில் குறை காணவும் எதிர்த்துத் திருத்தி மாற்றும் உரிமை பேணவும் இடந்தருமாட்சிமுறை அமைக்க விருப்பமா? ஆங்கிலர் ஆட்சி நம் சமுதாய மக்கள் எல்லாரும் ஒத்த உரிமை பெறுதற்கு அவ்

வாறு பெறுமளவும் வேண்டுமென்பார் தவறு எவ்வளவோ, அவ்வளவு தவறுடையார் நாம் தேர்ந்த தலைவராட்சியில் நமக்கு உரிமை வேண்டாமென்பாரும். ஊன்றி நோக்கில் முன்னதிலும் பின்னதில் கேடதிகம் விளையும்.

"நம்மவர் யாராயினும் எப்படியும் ஆளட்டும்; நம்மவருக்கு நல்லுரிமை வழங்கும் அந்நிய ராட்சியை விட, நமக்குரிமை மறுக்கும் நம்மவராட்சி நல்ல"தென்பார், குடியரசு விரும்புதல், காமாலைக்காரர் பல்வேறு நிறச் செல்வம் பேணுவது போன்றதாகும். இனி அந்நிய ராட்சி ஒழியுமளவும் அதை ஒழிக்க உதவும் தலைவர் விருப்பிற்கெல்லாம் உடன்படல் வேண்டுமென்பார் கூற்றும் உண்மையற்றது. உண்மைத் தலைவர் என்றும் தம்மவரை நண்பராகக் கருதி யவர்விருப்பத்தை மதித்து நடக்கவும்வேண்டும். அதற்குமதிகம் கருதவேண்டியது அந்நிய ராட்சி குறைந்து நமக்கு ஆட்சி யுரிமை வழங்கப்பெற்ற மாகாணங்களி லினி நம்மவருக்கு முற்றுரிமை பேணுவது. மாகாண ஆட்சிகளில் கூட மக்களுக்கு உரிமையே கிடையாது என்பது காந்தியாருள்ளிட்ட நம் தலைவர் பலரும் மந்திரியாரும் இப்போது கூறிவரும் உண்மைக்கு மாறாகும். இதன் உண்மை எதுவாயினும், என்றுன்றும் மக்களுரிமைக்குக் குறைவும் விருப்பத்திற்கு அவமதிப்பும் ஏற்படும் ஆட்சி அறவே வெறுத்து விலக்கத்தக்கது. ஆதலால் இன்று கூட்டத்தில் வந்துள்ள பெரியார் பலரும் உளங்கலந்து பேசி நம்மவருக்கு உண்மை நலமும் குறையாமுற்றுரிமையும் பேணி வளர்க்கும் வழிகளை ஆராய்ந்து வகுத்திடுக. ஊர்தோறும் தமிழர் ஒற்றுமை பெருக்க இன்றியமையாத கட்டுப்பாடுகளை ஏற்படுத்தித் தெருவெல்லாம் தமிழ் முழங்கச் செய்தல்வேண்டும். இந்தியாவை நினைந்து நம் சொந்தத் தமிழ் நாட்டை நாமிழத்தல் ஒம்ப வேண்டும். மறந்து செத்தால் உயிர் வராதன்றோ? சாவா மருந்து தேடி நம் தமிழச் சமுதாய வாழ்வு பேணுக. தமிழும் தமிழகமும் தலைநின்றோங்கி வீறு பெறுக.

சி. எம். வி. பிரஸ், மதுரை:—38